Literacy for a Billion

Movie: Sasanam
Year: 2006

Song: Poove Nee
Lyricist: K Kalimuthu

பூமேனி பூமேனி
கண்ணீரை மாற்றும்
காற்றும் நீதானோ
தோளோடு தோள் சேர்த்து
சோகங்கள் தீர்க்கும்
காலம் நீதானா
நிறைதரும் மனதுக்காக
உடைபடும் உயிர்களோ
அலைகடல் நிலத்தை காக்க
மழை தரும் வானமோ
தெய்வதமோ
பூமேனி பூமேனி
கண்ணீரை மாற்றும்
காற்றும் நீதானோ
தோளோடு தோள் சேர்த்து
சோகங்கள் தீர்க்கும்
காவியம் நீதானா
நிழல்தந்த ஆலமரம்
எரிகின்ற வேளை தன்னில்
தவித்து துடித்ததடி
குளிர்கின்ற தென்றல் வந்து
அளிக்கின்ற நன்றி கண்டு
மடியில் விழுந்ததடி
பூவணைத்து தீயணைத்து
காயங்கள் ஆற
காவிரியின் தாமரை உன்
தலை வாரிடும்
தூய மனக் காகிதத்தில்
தூரிகையும் காய
நேயமுடன் ஓவியத்தை
வரைந்தாய் இன்று
கலம் கரை சேர்ந்தது
கரை கரம் தந்தது
உப்புக் கண்ணீருமே
இன்று இனிப்பானது
கலக்கம் மறைந்ததம்மா
பூமேனி பூமேனி
கண்ணீரை மாற்றும்
காற்றும் நீதானோ
தோளோடு தோள் சேர்த்து
சோகங்கள் தீர்க்கும்
காவியம் நீதானா
மனையாளின் மஞ்சள் முகம்
அணையாத தீபம் என்று
உலகம் வணங்குமம்மா
ஒரு பாதி காதல் கொண்ட
உமையாளை போல இன்று
உடலும் துடித்ததம்மா
பெற்றெடுத்த பிள்ளை இவன்
தந்தை முகம் காண
கற்பழித்த துன்பத்திற்கு
மொழி ஏதம்மா
தத்தெடுத்த தத்துவத்தின்
தர்மங்கள் வேறு
அங்கு அவர்க்கு பிறந்த இடம்
கிடையாதம்மா
இதில் அழுதால் இதம்
இங்கு அணைத்தால் இதம்
நெஞ்சில் இணைத்தால் இதம்
முகம் புதைத்தால் இதம்
அமைதி பிறந்ததம்மா
பூமேனி பூமேனி
கண்ணீரை மாற்றும்
காற்றும் நீதானோ

தோளோடு தோள் சேர்த்து
சோகங்கள் தீர்க்கும்

காலம் நீதானா

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.